



# திருவள்ளுவர் வாழ்த்துகிறார்!

தமிழ் மொழியின்
பெரும் கிழவா !
உலகிற்கு
பொதுமறை
தந்த உழவா !

தமிழர்
உயிரெழுத்தே
திருவள்ளுவா !
பாலத்தின்
பெருமை
எழுது..வா !

கலைஞரால்
எடுக்கப்பட்ட
சிலையே
வெள்ளி விழா
உனக்கு !

மு.க.ஸ்டாலின்
வாரிசுகளே
நூற்றாண்டு விழா
நடத்தும் என்பது
என் கணக்கு !

கன்னியாகுமரி
மாத்தூர்
தொங்கு பாலம்
அசந்து
பார்க்கிறது !

கடலின் காற்று
புதிய
காதலி வந்தாள்
என பாலத்தை
மயங்கி
ரசிக்கிறது !

சீனாவில்
சோங்கிங் மற்றும்
சாங்சா நகர்
இணைக்கும்
சிடு. பாலம்
அருமையானது !

சோழன் பேரன்
கலைஞர் மகன்
மு.க.ஸ்டாலின்
கட்டிய
கண்ணாடிப் பாலம்
அழகானது !

பாலத்தைத்
தழுவி
நழுவிச் செல்லும்
அலையே
பாம்பன் பாலம்
பொறாமைப்
படுகிறதா ?

பாலங்களின்
நாயகன்
மு.க. ஸ்டாலின்
ஆளுமை
தெரிகிறதா !

திருக்குறள்
கண்காட்சி
வரலாற்று மாட்சி !

வெள்ளி விழா
மலர்
நாளை
அத்தாட்சி !

கடல் வறண்டாலும்
வள்ளுவர் சிலை
இருக்கும் !

அப்போதும்
முத்தமிழ் அறிஞர்
கலைஞர் பெயர்
சிறக்கும் !

கண்ணாடி
பாலத்தில்
தமிழினம்
நடக்கும்!

முக ஸ்டாலின்
புகழ்க் கொடி
பறக்கும் !

தாராசுரம் கோவில்
சோழன் புகழுக்கு
அன்று !

கடல் மேல் கண்ணாடி
இழைப் பாலம்
மு.க.ஸ்டாலினுக்கு
இன்று !

கலைஞரின்
பூம்புகார்
தோரண வாயில்
அன்று !

திருவள்ளுவர்
தோரண வாயில்
தலைவர்
மு.க.ஸ்டாலினுக்கு
இன்று !

திருவள்ளுவர்
வாழ்த்திப் பாடுகிறார்
தலைவரை
நின்று !



கவிஞர்
**ஈரோடு இறைவன்**
கழக - இலக்கிய அணி
இணைச் செயலாளர்



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாசிகளுடன், கரூர் மாநகராட்சி பகுதிக்கு உட்பட்ட வார்டு எண் 48, தென்றல் நகரில், ரூ. 16 லட்சம் மதிப்பில் மழை நீர் வடிகால் அமைத்திடும் பணிக்கு மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி அடிக்கல் நாட்டினார். கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல், சட்டமன்ற உறுப்பினர்கள் இரா. மாணிக்கம், ஆர். இளங்கோ, க.சிவகாமசுந்தரி, மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி சரவணன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் கலந்துக்கொண்டனர்.





வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அறிவுறுத்தலின்படி, விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி தலைமையில் விழுப்புரம் தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாவட்ட அளவிலான “உதயா கோப்பை” மாபெரும் இறகுப்பந்து திருவிழாவின் பரிசளிப்பு விழா நடைபெற்றது. விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் E பாலாஜி வரவேற்புரையாற்றினார். துணை அமைப்பாளர்கள் ஆர்.பி.பரத், என்.சக்திவேல், வழக்கறிஞர் ரா.சதீஷ், அசோக்குமார், ஞான தேவா ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில மகளிர் அணி பிரச்சார குழுச் செயலாளர் எம் தேன்மொழி, தலைமை கழக வழக்கறிஞர் சுவை சுரேஷ், நகரச் செயலாளர் இரா.சக்கரை, நகர மன்றத் தலைவர் தமிழ்ச்செல்வி பிரபு ஒன்றியச் செயலாளர்கள் க.மும்மூர்த்தி, பி.தெய்வசிகாமணி, தே.முருகவேல், கல்பட்டு வி.ராஜா, வி.ஜி.பிரபாகரன், வே.கணேசன், ஜெய.ரவிதுரை, கு.செல்வமணி, அனைத்து விளையாட்டு ஒருங்கிணைப்பாளர் வாலிபால் மணி, பேரூர் செயலாளர்கள் பா.ஜீவா, பூக்கடை கணேசன் நகர பொருளாளர் என்.என்.இளங்கோ, நகர விளையாட்டு மேம்பாட்டு அணி நிர்வாகிகள் அமைப்பாளர் பிரவின், துணை அமைப்பாளர்கள் பாலகுமாரன், பாலாஜி, சேரன், மணிகண்டன், பிரபு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### ரூ.32.80 லட்சம் மதிப்பீட்டில் - செஞ்சி ஒன்றியம்

# வஸ்தரம்புரவடை கிராமத்தில் 2 புதிய கூடுதல் வகுப்பறை கட்டிடம் திறப்பு!

### செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பள்ளி குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கினார்!

செஞ்சி, ஜன. 1 -

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் வேலந்தாங்கல் ஊராட்சி வஸ்தளம்புர வடை கிராமத்தில் குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ்32.80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இரண்டு கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் கட்டப்பட்டு அதன் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் காணொளி காட்சி வாயிலாக புதிதாக கட்டப்பட்ட பள்ளி கட்டிடத்தை திறந்து வைத்தார்.

இதையடுத்து நடைபெற்ற நிகழ்ச்சியில் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு புதிய பள்ளி வகுப்பறையில் பள்ளி குழந்தைகளுக்கும், பொது மக்களுக்கு இனிப்பு வழங்கினார்.

நிகழ்ச்சியில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி வட்டார வளர்ச்சி அலுவலர் நடராஜன்,செஞ்சி மேற்கு ஒன்றிய செயலாளர் பச்சையப்பன், ஒன்றிய கவுன்சிலர் அண்ணமாள் ஆப்பரகாம், ஊராட்சி மன்ற தலைவர் ராஜா ஒன்றிய பொறியாளர்சுப்பிரமணியன், பணி மேற்பார்வையாளர் அருணாச்சலம் தலைமை ஆசிரியர் சவுரியம்மாள், உதவி தலைமை ஆசிரியர் அமுதா, நிர்வாகிகள் வேலு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### 48வது சென்னை புத்தகக் காட்சியில் – தினந்தோறும்

# திராவிட இயக்க ஆளுமைகளுடன் வாசகர்கள் கலந்துரையாடல் நிகழ்ச்சி!

## தமிழ் காமராசன் உடனான உரையாடலில் வாசகர்கள் ஆர்வமுடன் பங்கேற்பு!



**சென்னை, ஜன 1 -**

**சென்னையில் நடைபெறும் 48-வது புத்தகக் காட்சியில் திராவிட இயக்க ஆளுமை ஒருவருடன் தினந்தோறும் வாசகர்கள் பங்கேற்கும் கலந்துரையாடல் நிகழ்ச்சி 29.12.2024 அன்று நடைபெற்றது.**

இதில் திராவிட இயக்க, ஆய்வாளர் தமிழ் காமராசன் உடனான கலந்துரையாடலில், வாசகர்கள் பலரும் ஆர்வமுடன் பங்கேற்றனர்.

சென்னை, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் 27.12.2024 அன்று 48-வது சென்னை புத்தகக் காட்சியைத் தொடங்கி வைத்த துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கழக இளைஞர் அணியின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் பதிப்பக அரங்கைப் பார்வையிட்டார்.

இதனைத் தொடர்ந்து, வாசகர்களின் வாசிப்பு அனுபவத்தை ஊக்குவிக்கும் விதமாக, தினம்தோறும் திராவிட இயக்க எழுத்தாளுமையை அழைத்து வந்து, வாசகர்களின் கேள்விக்குப் பதில் அளிக்கும் நிகழ்ச்சிக்கு முத்தமிழறிஞர் பதிப்பகம் ஏற்பாடு செய்துள்ளது.

அந்த வகையில், நேற்று முன்தினம் (29.12.2024) திராவிட ஆய்வாளர் தமிழ் காமராசன் பங்கேற்று, திராவிட இயக்கம் எப்படி எழுதியும் பேசியும் வளர்ந்தது என்பதை எடுத்துரைத்தார்.

பெரியார், அண்ணா, கலைஞர் போன்ற பெருந்தலைவர்கள் மட்டுமின்றி, கழகத்தில் சாமானிய தொண்டர்கள் கூட எழுதினர், பேசினர்.

அதுபோல இன்றைய இளம் தலைமுறையினரும் தி.மு.கழகத்தின் கொள்கையும், தமிழ்நாட்டிற்கு செய்திருக்கிற பங்களிப்பையும் எழுதவும், பேசவும் வேண்டும் என்று அவர் ஆற்றிய சிறு உரை வாசிப்பைத் தூண்டுவதாக அமைந்தது.

வாசகர்கள் தங்களுடைய சந்தேகங்களைக் கேட்டு விளக்கம் பெற்றனர்.

# அரசுக்கு எதிரான அவதூறுகளை முறியடிக்க வாசிப்பும் எழுத்தும் பேச்சும் முக்கியம்!





சென்னை, ஜன 1 -

சென்னையில் நடைபெறும் 48-வது புத்தகக் காட்சியில் திராவிட இயக்க ஆளுமை ஒருவருடன் தினந்தோறும் வாசகர்கள் பங்கேற்கும் கலந்துரையாடல் நிகழ்ச்சியை முத்தமிழறிஞர் பதிப்பகம் நடத்தி வருகிறது. தி.மு.க. செய்தித்தொடர்பாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி உடன் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலில், வாசகர்கள் பலரும் ஆர்வமுடன் பங்கேற்றனர்.

வாசகர்களிடையே பேசிய சூர்யா கிருஷ்ணமூர்த்தி, “பேச்சையும், எழுத்தையும் கழித்துவிட்டால் திராவிட இயக்கம் என்ற ஒன்றே இருந்திருக்க முடியாது. பேச்சையும், எழுத்தையும் வைத்துதான் இந்த இயக்கம் சாதித்த அனைத்து மாற்றங்களும் நடந்தேறியது. அரை நூற்றாண்டுக்கு முன்பு வரை எழுதுவதற்கும், பேசுவதற்கும் பலர் இருந்தனர். ஆனால் அவர்களுக்கு எழுதவும், பேசவும் வாய்ப்பு அவ்வளவு எளிதில் கிடைக்கவில்லை. பல்வேறு சமூகத்தடைகள், நேரடித் தாக்குதல்கள் இருந்தன. அவற்றையெல்லாம் சமாளித்துதான் திராவிட இயக்கத் தலைவர்கள் எழுதவும், பேசவும் துணிந்து முன்வந்தனர்.

ஆனால் இன்றைக்கு யார் வேண்டுமானாலும் எழுதலாம், பேசலாம். அதற்கான சூழல் இருக்கிறது. சிந்தனை இருந்தால் போதும், யார் வேண்டுமானாலும் பேசலாம் என மேடையை வழங்கியிருக்கிறது ‘என் உயிரினும் மேலான’ பேச்சுப்போட்டி. யார் வேண்டுமானாலும் எழுதலாம் என்ற வாய்ப்பை முரசொலி பாசறைப் பக்கம் சாத்தியப்படுத்தியிருக்கிறது. இதன் அடுத்தகட்டமாக உருவாகியிருப்பதுதான் முத்தமிழறிஞர் பதிப்பகம். இந்த நூல்களையும், தி.மு.க. வரலாறு சார்ந்த மற்ற பல நூல்களையும் இன்றைய இளம் தலைமுறை வாசிக்க வேண்டும்.

அதன்மூலம் நீங்களும் பேச்சாளர்களாக, எழுத்தாளர்களாக உருவெடுக்க வேண்டும். குறிப்பாக சமூக வலைத்தளங்களில் எழுத, பேச வேண்டும். ஏனென்றால் இன்றைய சூழலில் அச்சு, தொலைக்காட்சி ஊடகங்களை விட செய்திகள் அதிகம் பரவும் இடம் சமூக வலைத்தளங்கள்தான். இன்றைய இளம் தலைமுறையினர் அங்கேதான் இருக்கிறார்கள். தி.மு.கழகத்திற்கு எதிரான அவதூறுகளும் எதிரிகளால் திட்டமிட்டு சமூக ஊடகங்களில்தான் பரப்பப்படுகிறது. ஆட்சிக்கு எதிராக, எந்த குறையும் சொல்ல முடியாத சூழலில், தனிநபர் சிக்கல்களை சட்ட ஒழுங்கு சிக்கலாக திசைதிருப்பும் சூழ்ச்சிகள் அங்கேதான் நடக்கின்றன. அவற்றை முறியடிக்க நமக்கு வாசிப்பு அவசியம். இந்த இயக்கத்தின் மீதான அவதூறுகளை முறியடிக்க வாசித்ததை பேசுவதும், எழுதுவதும் மிக மிக அவசியம்” எனக் கூறினார்.

வாசர்கள் எழுப்பிய பல்வேறு கேள்விகளுக்கும் எளிமையான முறையில் விளக்கம் அளித்தார்.

**- சூர்யா கிருஷ்ணமூர்த்தி**

# கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாநில நிர்வாகிகளுக்கு!

## வாகை சந்திரசேகர் வேண்டுகோள்!

*சென்னை, ஜன. 1 -*

*கழக கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாநில நிர்வாகிகளுக்கு மாநிலத் தலைவர் வாகை சந்திரசேகர் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு: -*

*நில நிர்வாகிகள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதற்கு இணங்க மாநில அளவிலான ஒப்பித்தல் போட்டி வரும் 4.1.2025 அன்று அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நடைபெற உள்ளது. இதனை பள்ளிகளுக்கு தெரிவிக்கவும், மேலும், போட்டி நடத்தாமல் உள்ள மாவட்டங்களில் நடத்தி முடித்திடவும் வேண்டுகிறேன்.*

*மாவட்ட அளவில் தேர்வு செய்யப்பட்ட மூன்று மாணவர்களையும் சம்பந்தப்பட்ட நிர்வாகிகள் காலை 9 மணிக்குள் அரங்கத்திற்கு அழைத்து வர வேண்டுகிறேன். இவ்வாறு தலைவர் - கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை தலைவர் வாகை சந்திரசேகர் அறிக்கையில் கேட்டுக்கொண் டுள்ளார்.*





புதுக்கோட்டை வடக்கு மாவட்டம், அன்னவாசல் தெற்கு ஒன்றியம், ஆரியூர், செல்வி பிரதர்ஸ்களால் நடத்தப்பட்ட 14 ஆம் ஆண்டு மாபெரும் மின்னொளி கபாடி போட்டியின் இறுதி ஆட்டத்தை மாவட்டக் கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தொடங்கி வைத்தார். நிகழ்வுகளில் ஒன்றிய செயலாளர் கே.எஸ்.சந்திரன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் ராப்பூசல் எம்.செந்தில்குமார், மாவட்ட கவுன்சிலர் கை.பழனிச்சாமி, ஆரியூர் ஊராட்சி மன்ற தலைவர் எம்.வி.முத்தையா, மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் பி.சதீஷ்குமார், அன்னவாசல் வடக்கு ஒன்றிய துணை செயலாளர் மழவராயன்பட்டி கார்த்தி, விராலிமலை தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் தமிழினியன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.